**கவனிக்க.**- *15.04.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : தொகதி (III) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1703 - 2011 අප්‍රේල් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.04.21**

*1703 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## *பகுதி II - சட்ட சம்பந்தமானது*

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமுலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | 38 |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 39 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |

### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2011, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, ஏப்பிறல் மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# நொத்தாரிசுமார் பட்டியல்

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 107)

நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 107) 11 வது பிரிவின் கீழ் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்கள் கீழ் குறிப்பட்ட நியமனங்களைச் செய்துள்ளார்.

1. பதுளை, பின்னருவை, பிலிபொத்தகம, இல. 50 என்னுமிடத்தில் வதியும் செல்வி மஹந்தே ஆரச்சிலாகே தம்மிகா மல்காந்தி அவர்களை பதுளை நீதாசன வலயத்தினில் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

2. பிலியந்தலை, பலிகெதர, வெலி பர, இல. 149/2/D என்னுமிடத்தில் வதியும் திரு. ஹமந்தா ரசிகா கார்டிஹேவா அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

3. தெஹிவலை, களுபோவில, மங்கல வீதி. இல. 53 / 1 / A என்னுமிடத்தில் வதியும் செல்வி மல்கா சம்மனி விக்ரமசேகர ராஜபக்ஷ விமலகுனரத்ன அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

4. கோட்டை, எத்துல் கோட்டை, பெரேரா மாவத்தை, இல. 16 என்னுமிடத்தில் வதியும் திரு. தினேஷ் விதானபத்திரன அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையற்றும் நொத்தாரிசாக.

5. கோபாய், திருநெல்வேலி, கிராம அபிவிருத்தி திட்டம் இல. 112 என்னுமிடத்தில் வதியும் திரு. நடராஜ ஐயர் சதாசிவ ஐயர் அவர்களை யாழ்ப்பாணம் நீதாசன வலயத்தினில் தமிழ் மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

6. குருநாகலை, மல்கடுவவ சுற்றுவட்ட வீதி, ''ஆனந்த'' என்னுமிடத்தில் வதியும் செல்வி சமந்தி சதுரிகா ஹேனநாயக்க அவர்களை குருநாகலை நீதாசன வலயத்தினில் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

பி. பீ. அபேகோன்,
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.

கொழும்பு 7,
15.03.2011.

4-600

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 107)

நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 107) 03 வது பிரிவின் கீழ் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்கள் கீழ் குறிப்பட்ட நியமனங்களைச் செய்துள்ளார்.

1. கண்டி பேராதனை வீதி, இல. 490/1A என்னுமிடத்தில் வதியும் திருமதி அலுத்கே குமுதினி நில்மினி தர்மாதாச அவர்களை கண்டி நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

2. அஹுங்கல்ல, எகொடமுல்லை, காலி வீதி என்னுமிடத்தில் வதியும் திரு. மத்தகே ரொஹானா சம்பத் அவர்களை காலி நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

3. நீர்கொழும்பு, கெழும்பு வீதி, இல. 400/7 என்னுமிடத்தில் வதியும் திருமதி டியானா வீரசிங்க அவர்களை நீர்கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

4. ஆண்டியம்பலம், ஜயகொடி மாவத்தை, இல. 207/ 5 என்னுமிடத்தில் வதியும் திரு. ரெசென் மரியோ மதவெல அவர்களை நீர்கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

5. தெஹிவலை, ரொபட் இடம், இல. 16A என்னுமிடத்தில் வதியும் திருமதி தரிந்தி மல்மீ திசாநாயக்க அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

6. கோட்டை, பத்தகன, துவ வீதி, இல. 196 என்னுமிடத்தில் வதியும் திருமதி தர்சன உதயானி ரத்நாயக்க அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

7. கொழும்பு 05, ஹெவ்லொக் வீதி, எட்வட் அவனியூ, இல. 291/16 என்னுமிடத்தில் வதியும் செல்வி மாரம்பே வீரசிங்க முதியன்சே ராலஹாமில்லாகே திருனி ஒபேகா குமாரிஹாமி மாரம்பே அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

பீ. பி. அபேகோன்,
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.

கொழும்பு 7,
15.03.2011.

4-601

# நானாவித அறிவித்தல்கள்

## ஜயவிக்கிரம மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

நிஷாந்த முத்துஹெட்டிகம ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ''ஜயவிக்ரம மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(அ) மன்றத்தின் உறுப்பினர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தல் ;
(ஆ) மன்றத்தின் உறுப்பினர்களின் கலாசார தேவைப்பாடுகளை நிறைவேற்றல் ;
(இ) மன்றத்தின் உறுப்பினர்களிடையே பரஸ்பர உதவிகள் பற்றிய உணர்வை மேம்படுத்தலும்,

பிறவும்.

நிஷாந்த முத்தெட்டிகம,
பாராளுமன்ற உறுப்பினர்,
காலி மாவட்டம்.

4-610

---

## தொழில்நுட்பத்தையும் சமூகசேவையையும் உயர்த்துவதற்கான கல்வி நிலையம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

கனக ஹேரத் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ''தொழில்நுட்பத்தையும், சமூக சேவையையும் உயர்த்துவதற்கான கல்வி நிலையம் கூட்டிணைப்ப தற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த நிலையத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(அ) ஒன்றியம் ஒன்றை உருவாக்கி அது சம்பந்தமான கலந்துரையாடல்களை மேற்கொள்ளல் ;
(ஆ) தகவல் விபரத்திரட்டொன்றை உருவாக்கி நடாத்துதல்,

பிறவும்.

கனக ஹேரத்,
பாராளுமன்ற உறுப்பினர்,
கேகாலை மாவட்டம்.

4-613

---

## அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில்

ஹத்துவ எஸ்டேட், ரண்வல, மீதிரிகல என்னும் முகவரியில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக்கொண்டுள்ள நெல்னா பார்ம் (பிறைவேட்) லிமிட்டெட்டின் ( PV 2824) விடயத்திலும் ;

வழக்கு இல. : மே. நீ. (குடியியல்) 17/2011 சீஓ
தன்மை : ஒடுக்குதல்

அத்துடன்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பாகம் XII என்பதன் நியதிகளின்கீழ் நீதிமன்றத்தால் ஒடுக்குவதற்கான விண்ணப்பம் ஒன்றின் விடயத்திலும் ;

இல. 205, விஸ்ட்வைக் வீதி, கொழும்பு 15 என்னும் முகவரியைச் சேர்ந்த கோல்ட் கொய்ன் மில்ஸ் (லங்கா) லிமிட்டெட்

.................... மனுதாரர்

மேற்கூறப்பட்ட கம்பனியை (கொழும்பில் நடைபெறும்) மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தால் அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் ஒடுக்குவதற்கான மனுவொன்று இல. 205, விஸ்ட்வைக் வீதி, கொழும்பு 15 என்னும் முகவரியைச் சேர்ந்த கோல்ட் கொய்ன் மில்ஸ் (லங்கா) லிமிட்டெட்டால் 2011, மாச்சு 15 ஆந் திகதியன்று மேற்படி நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதெனவும் மேற்படி மனு 2011, யூன் 14 ஆந் திகதி நீதிமன்றத்தின முன்னிலையில் விசாரிக்கப்படுவதற்குப் பணிக்கப்பட்டுள்ளது எனவும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. மேற்படி மனுவின் மீது கட்டளையொன்று ஆக்கப்படுவதை ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ விரும்பும் மேற்படி கம்பனியின் எவரேனும் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் விசாரணையின்போது அந்நோக்கத்திற் கென நேரிலோ அல்லது தமது சட்டத்தரணி மூலமோ தோற்றலாம். மனுவின் பிரதியொன்றைத் தேவைப்படுத்தும் மேற்படி கம்பனியின் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் எவருக்கும் அதற்கென விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தின் கொடுப்பனவின்மீது கீழே கையொப்பமிட்டுள்ளவரால் கொடுத்துதவப்படும்:-

திருவாளர்கள் எவ். ஜே. அன்ட் ஜீ. டீ சேரம்,
சட்டத்தரணிகள்,
216, டீ சேரம் பிளேஸ்,
கொழும்பு 10.

**குறிப்பு**.- மேற்படி மனுவின் விசாரணையின்போது தோற்ற உத்தேசிக்கும் ஆளெவரும் தமது எண்ணத்தைப் பற்றிய அறிவித்தலை சட்டத்தரணிகள் திருவாளர்கள் எவ். ஜே. அன்ட் ஜீ. டீ சேரம் அவர்களுக்கு எழுத்தில் சேர்ப்பித்தல் வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். அத்தகைய அறிவித்தலில் ஆளின் பெயரும் முகவரியும் அலல்து நிறுவனமொன்றில் நிறுவனத்தின் பெயரும் முகவரியும் குறிப்பிடப்பட்டு ஆளினால் அல்லது நிறுவனத்தினால் அல்லது அவரது அல்லது அதன் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணியால் (எவருமிருப்பின்) கையொப்பமிடப்பட்டு சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்பப்படுமாயின் 2011, யூன் 13 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்குப் பிந்தாமல் மேற்கூறப்பட்டவருக்குக் கிடைக்கக்கூடியதாக போதிய கால அவகாசத்துடன் அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

4-653